<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 217/2020

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 08 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரேம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சந்திரன் | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 08-01-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. தாவா சொத்திற்கு நான் உரிமையாளர் இல்லை என்றால் சரிதான். கே.பழனிசாமி என்பவர் தான் உரிமையாளர் ஆவார். இவ்வழக்கில் பழனிசாமி ஒரு தரப்பினராக இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணப்படி பழனிசாமி எனக்கு பொது அதிகாரம் கொடுத்து இருக்கிறார். வழக்கு சொத்து எந்த சர்வே எண்ணில் இருக்கிறது என்று எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 நாட்களுக்கு முன்பாக என் பெயரில் பொது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பாக வழக்கு சொத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

2. எனக்கு 50 செண்ட் நிலம் தொடர்பாக, பொது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சாட்சி மீண்டும் 1.59 ஏக்கர் என பதில் அளிக்கிறார். வழக்கு 50 செண்ட் நிலம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பூமி பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாகும்.

3. 50 செண்ட் பூமிக்கு செக்குபந்தி எதுவும் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பழனிசாமிக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. பழனிசாமி பெயரிலான சொத்து ஆவணங்களை நான் பார்த்து இருக்கிறேனா என்றால், வழக்கு விவரங்கள் என் தகப்பனார் சந்திரனுக்கு தான் தெரியும். அவர் திருப்பூரில் தான் இருக்கிறார். தாவா சொத்தை சுற்றி யாருடைய சொத்துக்கள் இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது.

4. சர்வே எண்.110—ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. சர்வே எண்.110—ல் உள்ள மொத்த விஸ்தீரணமான 3.18 ஏக்கர் நிலத்தில் கிழபுற பகுதி வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரம் தெரியும்.

5. பழனிசாமிக்கு எதிராக 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கோவிந்தசாமி, இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.90/2016 தாக்கல் செய்து இருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பழனிசாமிக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் சொத்துக்கள், கடந்த 21.06.1972 தேதியிலேயே கோவிந்தசாமி மற்றும் உடையா கவுண்டர் ஆகியோரால் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6. எனவே, பழனிசாமிக்கு சொத்தில் எத்தகைய உரிமையும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. உரிமை இல்லாத சொத்துக்கு என் பெயரில் பொய்யாக பவர் பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பழனிசாமி வழக்கில் கட்சி சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கடந்த 31.12.2023 தேதியன்று பழனிசாமி அடியாட்களுடன் சென்று 1ம் பிரதிவாதியையும்,

அவரது மனைவியையும் வெட்டியது தொடர்பாக வழக்கு ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உரிமை மூலம் எதுவும் இன்றி தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T
Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.01.08 14:30:30 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.